Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், டிசம்பர் 30, 2025 | இதழ் 261

## மனதின் குரல் நிகழ்ச்சியின் 129 - வது அத்தியாயத்தின் சில முக்கிய அம்சங்களை பிரதமர் நரேந்திர மோடி, பகிர்ந்துள்ளார்

சென்னை, 30 டிசம்பர் 2025: மன் கி பாத் எனப்படும் மனதின் குரல் நிகழ்ச்சியின் 129 - வது அத்தியாயத்தின் சில முக்கிய அம்சங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி, பகிர்ந்து கொண்டார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள தொடர் பதிவுகளில், கூறியிருப்பதாவது:

"140 கோடி இந்தியர்களின் வலிமை மற்றும் திறமைகளுக்கு நன்றி, 2025 - ம் ஆண்டில் நமது தேசம் பல்வேறு துறைகளில் சாதனைகளை படைத்துள்ளது."

#மன்_கி_பாத்

"வளர்ச்சியடைந்த இந்தியா குறித்த இளைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கு, நாட்டைக் கட்டமைப்பதில் பங்களிப்பதற்கான ஒரு சிறந்த தளமாகும். 2026 ஜனவரி 12 அன்று நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, நமது இளையோர் சக்தியின் நுண்ணறிவு மற்றும் கருத்துக்களை கேட்பதற்கு மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன்."

#மன்_கி_பாத்

"ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டிகள், நமது இளைஞர்களுக்கும் புதுமைக் கண்டுபிடிப்பாளர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மற்றும் சமூக சவால்களுக்குத் தீர்வு காண ஒரு தளத்தை வழங்குகிறது."

#மன்_கி_பாத்

"இந்தியாவின் இளைஞர்கள் நீடித்த வளர்ச்சி குறித்து மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். இது தொடர்பாக, சூரிய சக்தியைப் பயன்படுத்தி சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ள மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த மொய்ராங்தெம் சேத் அவர்களைப் பாராட்டினேன்."

#மன்_கி_பாத்

"நமது சுதந்திரப் போராட்டத்திற்குப் பங்களித்தவரும், ஏழைகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிலும் கவனம் செலுத்தியவருமான பார்பதி கிரிஜியின் நூற்றாண்டு விழாவை அடுத்த மாதம் கொண்டாட உள்ளோம். #மன்_கி_பாத் நிகழ்ச்சியின் போது இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தினேன்."

#மன்_கி_பாத்

"ரான் உத்சவ் அழைக்கிறது!

கட்ச் பகுதிக்கு வருகைபுரிந்து ரான் உத்சவை அனுபவியுங்கள்.

நாட்டுப்புற மரபுகளின் தாளம், உள்ளூர் மக்களின் சிறந்த




கைவினைத்திறன் மற்றும் கட்ச் பகுதியின் காலத்தால் அழியாத அழகைக் காணவாருங்கள்."

#மன்_கி_பாத்

"அழகான கன்னட மொழியை இந்திய வம்சாவளி மக்களிடையே பிரபலமாக்கும் வகையில், துபாயில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பாராட்டத்தக்க முயற்சியை மன்_கி_பாத் நிகழ்ச்சியில் எடுத்துரைத்தேன்."

#மன்_கி_பாத்

"நரசாபுரம் நகரில் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி, உள்ளூர் மக்களின் சரிகை வேலைப்பாட்டின் கைவினைக் கலையை மீண்டும் உயிர்ப்பித்து, பலருக்கு அதிகாரம் அளித்துள்ளது."

#மன்_கி_பாத்

"இந்தியாவின் வலுவான கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடான ஃபிஜியில், தமிழ் மொழி பிரபலமடைந்து வருவதைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது."

#மன்_கி_பாத்

"காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் போது, காசி மக்களிடையே தமிழ் மொழி பிரபலமடைந்து வருவதைத் தெளிவாகக் காண முடிந்தது. இது மனதிற்கு இதமளிப்பதாக உள்ளது."

#மன்_கி_பாத்

"மணிப்பூர் மாநிலத்தின் சுராசந்த்பூரைச் சேர்ந்த மார்கரெட் ராம் தார்சீம், அம்மாநிலப் பாரம்பரிய கைவினைப் பொருட்களைப் பிரபலப்படுத்துவதிலும், மற்றவர்களின் வாழ்க்கைக்கு அதிகாரம் அளிப்பதிலும் ஆற்றிய பணிகளுக்காக பெருமைப்படுகிறேன்."

#மன்_கி_பாத்

"மணிப்பூர் மாநிலத்தின் சேனாதிபதி மாவட்டத்தைச் சேர்ந்த கே. சோகோன் கிரிசேனா, மலர் சாகுபடியில் சிறப்பான பணிகளைச் செய்து, பல்வேறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் மாற்றியமைத்துள்ளார்."

#மன்_கி_பாத்

## ரஷ்யா - உக்ரைன் அமைதி ஒப்பந்தம்: ஜெலன்ஸ்கி சந்திப்புக்கு பிறகு டிரம்ப் அறிவிப்பு



சென்னை, 30 டிசம்பர் 2025: ரஷ்யா-உக்ரைன் அமைதி ஒப்பந்தத்திற்கு எப்போது இல்லாத அளவுக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளது. 20 அம்ச அமைதி திட்டத்தில் 90 சதவீதம் ஜெலன்ஸ்கி சம்மதித்துள்ளார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையிலான 4 ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. அமைதி ஒப்பந்தம் குறித்து உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி, புளோரிடாவில் அமெரிக்க அதிபர் டிரம்பை சந்தித்துப் பேசினார்.

இதனையடுத்து இருவரும் கூட்டாக நிருபர்களை சந்தித்துப் பேசினர்.

அதிபர் டிரம்ப் கூறியதாவது:

ஜெலன்ஸ்கி உடன் சந்திப்பு அற்புதமானது. அவருடன் நிறைய விவாதித்தேன். அமைதி ஒப்பந்தத்திற்கு எப்போதும் இல்லாத அளவுக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளது. 20 அம்ச அமைதி திட்டத்தில் 90 சதவீதம் ஜெலன்ஸ்கி சம்மதித்துள்ளார்.

இரண்டாம் உலக போருக்கு பிறகு, மிக கொடிய போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அவர்கள் நிறைய முன்னேற்றம் அடைந்துள்ளனர். அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏராளமான மக்கள் உயிரிழந்து விட்டனர். தற்போது இரு அதிபர்களும் ஒரு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார்கள்.

எல்லோரும் போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறார்கள். ஆனால் இரு நாடுகளின் தலைவர்களுடனான புதிய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இப் பிரச்சினையில் வெளிப்படையான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நான் அதிபர் புதினுக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கப் போகிறேன், நாங்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வோம். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி கூறியதாவது:

நாங்கள் சிறந்த கலந்துரையாடலை நடத்தினோம், மேலும் இந்தச் சமீபத்திய வாரங்களில் அமெரிக்க மற்றும் உக்ரைன் குழுக்கள் பேச்சுவார்த்தை வாயிலாக அடைந்த முன்னேற்றத்தை நாங்கள் பாராட்டுகிறோம். உக்ரைன் அமைதிக்குத் தயாராக உள்ளது என்றார்.

ஜெலென்ஸ்கியை சந்திப்பதற்கு முன்பு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடனும் டிரம்ப் தொலைபேசியில் பேசினார். அப்போது ரஷ்யா அமைதி விஷயத்தில் "தீவிரமாக" இருப்பதாக புதின் வலியுறுத்தினார்.

அதிபர்கள் புதின் மற்றும் டிரம்ப் ஆகியோருக்கு இடையேயான தொலைபேசி அழைப்பு குறித்து ரஷ்ய ராஜதந்திர ஆலோசகர் யூரி உஷாகோவ் கூறுகையில், "தற்காலிக போர்நிறுத்தத்திற்கான உக்ரைன் மற்றும் ஐரோப்பிய முன்மொழிவு மோதலை நீட்டித்து, மீண்டும் மோதலை தொடங்கவே வழிவகுக்கும். சண்டையை தற்காலிகமாக நிறுத்துவது என்பது உக்ரைன் மீண்டும் ஆயுதம் ஏந்த வாய்ப்பாக அமையும். தற்காலிக தீர்வுக்கு பதிலாக, மோதலின் மூல பிரச்சினைகளை தீர்க்கும் ஒரு இறுதித் தீர்வையே ரஷ்யா விரும்புகிறது" என்றார்.

## நடுக்கடலில் மீன்பிடித்த தமிழக மீனவர்கள் 3 பேர் கைது. இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை: மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, 30 டிசம்பர் 2025: நடுக்கடலில் மீன்பிடித்த போது தமிழகத்தைச் சேர்ந்த 3 மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு துறைமுக பகுதியில் இருந்து நேற்று முன்தினம் 300-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 1,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். அதன்படி மண்டபத்தை சேர்ந்த விசைப்படகு ஒன்றில் ஆமோஸ்டின் (வயது 25), ஜோன்தாஸ் (38), பரலோக செபஸ்தியான் (26) ஆகிய 3 மீனவர்களும் மீன்பிடிக்க சென்றனர். இந்த மீனவர்கள் நடுக்கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு இலங்கை கடற்படையினர் ரோந்து கப்பலில் ரோந்து வந்துள்ளனர். பின்னர் அவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி மண்டபத்தை சேர்ந்த மீனவர்கள் ஆமோஸ்டின், ஜோன்தாஸ், பரலோக செபஸ்தியான் ஆகியோரை கைது செய்தனர். மேலும் அவர்களுடைய படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 3 பேரும் ஊர்க்காவல் துறை கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டனர். அப்போது நீதிபதி, 3 மீனவர்களையும் வருகிற 7-ந்தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து 3 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஸ்டாலின் கடிதம்

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 3 மீனவர்களை அவர்களது மீன்பிடி படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடி படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவது கவலை அளிக்கிறது. இந்த கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, தமிழ் நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடி படகுகள் அவர்கள் வசம் இருக்கிறது. 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருக்கிறார்கள்.

எனவே எதிர்காலத்தில் இதுபோன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 14 டன் கனரக செயற்கைக்கோள்களை ஏவுவதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் 3-வது ஏவுதளம்: இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்

சென்னை, 30 டிசம்பர் 2025: ஸ்ரீஹரிகோட்டாவில் 14 ஆயிரம் கிலோ எடை கொண்ட பொருட்களை தூக்கி செல்லும் திறன் கொண்ட 3-வது ஏவுதளம் அடுத்த 4 ஆண்டுகளில் செயல்பாட்டுக்கு வரும் என்று இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் கூறினார்.

ஆந்திரா மாநிலம் திருப்பதி மாவட்டத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (இஸ்ரோ) சொந்தமான ஏவுதளம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ளது.

இங்கு பி.எஸ்.எல்.வி. மற்றும் சிறிய வகை ராக்கெட்டுகளை ஏவுவதற்காக முதலாவது ஏவுதளமும், 6 ஆயிரம் கிலோ எடைகளை தாங்கி செல்லும் பாகுபலி அதாவது ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3, எல்.வி.எம். ரக ராக்கெட்டுகள் 2-வது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்படுகிறது.

இதனை தொடர்ந்து மனிதர்களை விண்ணுக்கு அனுப்பி மீண்டும் பூமிக்கு அழைத்து வரும் ககன்யான் போன்ற திட்டங்களை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதனால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட எடையை தாங்கி செல்லும் ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்த கூடுதல் சக்தி கொண்ட 3-வது ஏவுதளம் அமைக்க இஸ்ரோ திட்டமிட்டு இருந்தது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறும் போது, 'ஸ்ரீஹரிகோட்டாவில் 2-வது ஏவுதளத்தில் எதிர்பாராத விதமாக விபத்துகள் ஏதேனும் ஏற்பட்டு ஏவுதளம் சேதமடையும் போது ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்டுகளை ஏவ முடியாத சூழல் ஏற்படும். இஸ்ரோவின் அனைத்து விண்வெளி திட்டங்களும் தாமத



மடையும். எனவே முன்னெச்சரிக்கையாக ஜி.எஸ்.எல்.வி. மட்டுமின்றி, என்.ஜி.எல்.வி. (அடுத்த தலைமுறை ராக்கெட்) ராக்கெட்டுகளையும் ஏவும் வசதி கொண்ட 3-வது ஏவுதளத்தை ஸ்ரீஹரிகோட்டாவில் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த ஏவுதளத்தில் மகேந்திர கிரி இஸ்ரோ மையம் போன்ற சோதனை மையமும் அமைக்கப்பட உள்ளது' என்றனர்.

அடுத்த தலைமுறைக்கான என்.ஜி.எல்.வி. ராக்கெட் தயாரிப்பு விஞ்ஞானிகள் கூறும் போது, '12 ஆயிரம் முதல் 14 ஆயிரம் டன் எடையை சுமந்து செல்லும் திறன் கொண்ட அதிநவீன என்.ஜி.எல்.வி. ராக்கெட் தயாரிப்பு பணிகளில் இஸ்ரோ தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த ராக்கெட் 3 நிலைகளைக் கொண்டதாக இருக்கும். இதில் முதல் நிலையை மீண்டும் பயன்படுத்த முடியும்'' என்றனர்.

ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் 3-வது ஏவுதளம் அமைக்க தேசிய விண்வெளி ஆணையம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துவிட்டது.

பணி தொடங்கப்பட்டு அடுத்த 4 ஆண்டுகளில் இந்த ஏவுதளம் செயல் பாட்டுக்கு வரும் என்று இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் கூறினார்.



## ஐஎம்ஏ நேட்கான் 2025 மாநாட்டில், செறிவூட்டப்பட்ட கொழுப்புகள் மற்றும் பாமாயில் குறித்து அறிவியல் அடிப்படையிலான மறுமதிப்பீட்டிற்கு இருதயநோய் நிபுணர்கள் அழைப்பு விடுத்தனர்

சென்னை 30, டிசம்பர் 2025: இந்திய மருத்துவ சங்கத்தின் (ஐஎம்ஏ நேட்கான் 2025) 100வது தேசிய மாநாட்டில், இருதய நோய் நிபுணர்கள் உணவு கொழுப்புகள் மற்றும் இருதய ஆரோக்கியம் குறித்து அதிக சான்றுகள் அடிப் படையிலான புரித லுக்கு அழைப்பு விடுத் தனர். வளர்ந்து வரும் அறிவியல் சான்றுகளின் வெளிச்சத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் அனுமானங்கள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத் தினர். ஐஎம்ஏ நேட்கா னின் நூற்றாண்டு மாநாடு, இந்தியா முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுகாதாரத் துறைத் தலைவர்களை ஒன்றிணைத்து, மருத்துவ மற்றும் பொது சுகாதாரக் கண்ணோட்டங்களை வடிவமைப்பதற்கான ஒரு முக்கிய தளமாக அதன் பங்கை மீண்டும் உறுதிப்படுத்தியது.

டாக்டர் வருண் பன்சல் மற்றும் டாக்டர் கேதன் மேத்தா ஆகியோரால் நடத்தப் பட்ட இரண்டு நிபுணர் அமர்வுகள், தவறான தகவல்களால் பெரும் பாலும் குழப்பமடைந்த தலைப்புகளில் மருத்துவத் தெளிவை வழங்கின. அவை உணவு கொழுப்புகள், பாமாயில் மற்றும் வளர்ந்து வரும் இருதய வளர்சிதை மாற்ற சிகிச்சைகளின் பங்கை மருத்துவச் சான்றுகள் மற்றும் உலகளாவிய ஆராய்ச்சியின் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தன.

"பெருந்தமனி தடிப்பு, உணவுமுறை நிறைவுற்ற கொழுப்பு கள் மற்றும் பாமாயில்: அவை உண்மையில் இணைக்கப்பட்டுள்ளன வா?" என்ற தனது விளக்கக்காட்சியில், டாக்டர் பன்சால், நிறைவுற்ற கொழுப்பு களை நேரடியாக இதய நோயுடன் இணைக்கும் நீண்டகால அனுமானங் களை சவால் செய்தார்.



பல நாடுகளின் ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட, நிறைவுற்ற கொழுப்புகள் ஊட்டச் சத்து ரீதியாக சீரானவை அல்ல என்றும், ஒட்டு மொத்த உணவு முறை கள், வாழ்க்கை முறை மற்றும் மொத்த கலோரி உட்கொள்ளல் ஆகியவற்றால் இருதய ஆபத்து பாதிக்கப்படு கிறது என்றும் அவர் எடுத்துரைத்தார்.

சில கொழுப்பு மாற்றுகள் கொழுப் பைக் குறைக்கக்கூடும் என்றாலும், அவை தொடர்ந்து இருதய இறப்பைக் குறைக்காது என்றும், டிரான்ஸ் கொழுப்புகளுடன் ஒப்பிடுவது பாமாயி லுக்கு சாதகமான விளைவுகளைக் காட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். அவரது அமர்வு டபிள்யுஹெச்ஓ மற்றும் ஐசிஎம்ஆர்-என்ஐஎன் வழிகாட்டுதல்களுடன் ஒத்துப்போகிறது, அவை மிதமான தன்மை, எண்ணெய் களின் பன்முகத்தன்மை மற்றும் சீரான உட் கொள்ளலை வலியுறுத் துகின்றன.

"ஊட்டச்சத்து அறிவியலை எளிமை யான லேபிள்களாகக் குறைக்க முடியாது. முக்கியமானது சமநிலை, பன்முகத் தன்மை மற்றும் தகவலறிந்த தேர்வுகள், பயத்தால் இயக்கப் படும் தவிர்ப்பு அல்ல," என்று டாக்டர் வருண் பன்சால் கூறினார்.

## தடுப்பு சுகாதாரம், டிஜிட்டல் புதுப்பிப்புகள் மற்றும் முதியோர் பராமரிப்பு ஆகியவை இந்தியாவின் மாறிவரும் காப்பீட்டு நடத்தையை வழிநடத்துகின்றன: கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் போக்குகள் அறிக்கை 2025

சென்னை 30, டிசம்பர் 2025: கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் இன்று தனது விரிவான 2025 ஆண்டுப் போக்குகள் அறிக்கை யை வெளியிட்டது. மாறிவரும் நுகர்வோர் நடத்தைகள், டிஜிட்டல் பயன்பாடு மற்றும் வளர்ந்து வரும் சுகாதாரக் கோரிக் கைகளின் வடிவங்கள் குறித்த அறிக்கையின் பகுப்பாய்வில், முன் கூட்டியே சுகாதாரக் காப்பீட்டைப் பெறு வதில் ஒரு பெரிய மாற்றம் மற்றும் டிஜிட்டல் ஈடுபாட் டின் மீதான வலுவான விருப்பம் ஆகியவை முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளன.

அறிக்கையின் தரவு களின்படி, இந்தியர்கள் தீவிரமாக சுகாதாரக் காப்பீட்டைப் பெறும் ஒரு தெளிவான போக்கு உள்ளது. 2023-2024 முதல் 2024-2025 வரையிலான காப்பீட்டு ஆண்டில், காப்பீடு செய்யப்பட்ட உறுப் பினர்களின் எண்ணிக் கையில் 27% க்கும் அதிகமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது - இது அதிகரித்து வரும் மருத்துவச் செலவு களால் உந்தப்பட்ட, விரிவான சுகாதாரக் காப்பீட்டின் தேவை குறித்த வளர்ந்து வரும் விழிப்புணர்வை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கேர் ஹெல்த் இன்சூ ரன்ஸின் தலைமைச் செயல்பாட்டு அதிகாரி மணீஷ் டோதேஜா கருத்துத் தெரிவிக்கை யில், "எங்கள் ஆண்டுப் போக்குகள் அறிக்கை யிலிருந்து, இந்திய சுகாதாரக் காப்பீட்டு நுகர்வோர் முன்கூட்டி யே விரிவான சுகாதாரக் காப்பீட்டைத் தேடு கிறார்கள் என்பதும், மேலும் தொழில்நுட் பத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்களாக மாறி வருகிறார்கள் என்பதும் தெளிவாகிறது. நுகர் வோர் தடுப்பு சுகாதாரப் பராமரிப்பு மற்றும் வாழ்க்கை முறைப் பராமரிப்புக்கு முன்னுரிமை அளிக்கின் றனர். இந்த நடத்தை மாற்றங்களின் மூலம் நாங்கள் வழிநடத்தப் பட்டு, கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் உள் ளுணர்வு சார்ந்த தீர்வு களை வழங்குவதை உறுதிசெய்கிறோம். சுகாதாரக் காப்பீட் டைப் புரிந்துகொள் வதை எளிதாக்கவும், அதை மேலும் அணுகக் கூடியதாகவும், எங்கள் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவை களுக்கு ஏற்ப மாற்றி யமைக்கவும் தொழில் நுட்பத்தில் முதலீடு செய்ய நாங்கள் கடமைப்பட் டுள்ளோம்," என்றார்.

நிறுவனம் அனைத்து வயதுக் குழுக்களிலும் வாங்கும் பழக்கவழக் கங்களில் ஒரு மாற்றத் தைக் கண்டது. அனைத்துப் பிரிவின ரிடமும் சராசரி காப்பீட்டுத் தொகை யில் ஆண்டுதோறும் அதிகரிப்பு காணப்பட் டுள்ளது.

உதாரணமாக, 0-17 வயதுக்குழுவினருக் கான சராசரி காப் பீட்டுத் தொகை 2024-2025 முதல் 2025-2026 வரை 7% க்கும் அதிக மாக அதிகரித்துள்ளது, இது குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக் காக அதிக காப் பீட்டைப் பெறுகின்றன என்பதைக் காட்டு கிறது. இது தவிர, முதல் முறையாக வாங்குபவர் கள் (18-35 வயதுடைய வர்கள்), 2025-2026 ஆம் ஆண்டிற்கான மொத்த பாலிசிதாரர் களில் கணிசமான பகுதியாக, மொத்தப் பங்கில் 30% க்கும் அதிகமாகத் தொடர்ந்து உள்ளனர். மேலும், மூத்த குடிமக்களின் (60 வயது மற்றும் அதற்கு மேற் பட்டவர்கள்) விகிதம் 2025-2026 இல் கிட்டத் தட்ட 14% ஆக அதிகரித்துள்ளது.

## அமெரிக்காவில் நடுவானில் 2 ஹெலிகாப்டர்கள் மோதல்: விமானி உயிரிழப்பு

சென்னை 30, டிசம்பர் 2025: அமெரிக்காவில் நடு வானில் 2 ஹெலிகாப் டர்கள் மோதிக் கொண்ட விபத்தில் விமானி உயிரிழந்தார்.

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத் தில் உள்ள ஹேமண் டன் விமான நிலையத் திற்கு அருகில் 2 ஹெலிகாப்டர்கள் எதிர்பாராத விதமாக நடுவானில் மோதிக் கொண்டன.

விபத்தில் சிக்கிய இந்த ஹெலிகாப்டர்கள் தரையில் விழுந்து தீப்பற்றி எரியத் தொடங்கின.

இந்த சம்பவத்தில் ஒரு ஹெலிகாப்டர் விமானி உயிரிழந்த நிலையில், மற்றொருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து ஹேமண்டன் காவல் துறைத் தலைவர் கெவின் பிரீல் கூறுகை யில், காலை 11:25 மணியளவில் விமான விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திலிருந்து எடுக்கப் பட்ட சிசி டிவி கேமரா ஒன்றில் ஹெலிகாப்டர் வேகமாகச் சுழன்று தரையில் விழுவது தெரிகிறது.




இது குறித்து தகவல் அறிந்து அங்கு சென்ற தீயணைப்புப் படை யினர் ஹெலிகாப்டர் களில் பற்றிய தீயை அணைக்கும் காட்சியும் பதிவாகி உள்ளது.

விபத்து நடந்த இடத்திற்கு அருகி லுள்ள காபி கடை ஒன்றின் உரிமையாளர் கூறுகையில், அந்த விமானிகள் தங்கள் உணவகத்திற்குத் தவறாமல் வருபவர்கள் என்றும், அடிக்கடி ஒன்றாக காலை உணவு உண்பார்கள் என்றும் கூறினார்.

அவரும் மற்ற வாடிக்கையாளர்களும் ஹெலிகாப்டர்கள் புறப் படுவதைப் பார்த்ததாக வும், பின்னர் ஒன்று சுழன்று கீழே விழத் தொடங்கிய தாகவும், அதைத் தொடர்ந்து மற்றொன்றும் விழுந்த தாகவும் அவர் கூறினார்.

## 4வது நாளாக சென்னை மெரினாவில் இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம்

சென்னை 30, டிசம்பர் 2025: 'சம வேலைக்கு சம ஊதியம்' என்ற கோரிக்கையை வலியுறுத்தி சென்னை மெரீனாவில் போராட் டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர் களை போலீசார் கைது செய்தனர்.

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் 2009 மே 31ந்தேதி நியமிக்கப் பட்ட அரசு பள்ளி இடைநிலை ஆசிரியர் களுக்கு ஒரு ஊதியமும், அதே ஆண்டு ஜூன் 1ல் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரி யர்களுக்கு மற்றொரு ஊதியமும் நிர்ணயிக்கப் பட்டது. ஒருநாள் வித்தி யாசத்தில் அடிப்படை ஊதியத்தில் ரூ.3,170 குறைந்துள்ளது. இதனால் சுமார் 20 ஆயிரம் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த முரண்பாட்டை களைந்து சம வேலைக்கு சம ஊதியம் வழங்க கோரி இடை நிலை ஆசிரியர்கள் நீண்டகாலமாக வலி யுறுத்தி வந்தனர். இதனிடையே கடந்த தேர்தலில் தி.மு.க. இடைநிலை ஆசிரியர் களுக்கு சம வேலைக்கு, சம ஊதியம் வழங்குவ தாக தேர்தல் வாக்குறுதி யில் அறிவித்தனர். தற்போது ஆட்சி முடியவுள்ள தருணத் தில் இந்த வாக்குறுதி யை தி.மு.க. அரசு இன்னும் நிறைவேற்ற வில்லை.

இதனைக் கண்டித்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக் கத்தினர் சென்னையில் கடந்த 26ந்தேதி நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக்கல்வித் துறை அலுவலகத்தை (டிபிஐ) முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பதாகை களை ஏந்தியபடி, முழக்கமிட்டனர். போராட்டம் நடத்திய வர்களை போலீசார் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று கைது செய்து அரசு பஸ்சில் ஏற்றி அருகில் உள்ள மண்டபத்தில் தங்க வைத்தனர். இரண்டா வது நாளாக 27-ந்தேதி, சென்னை எழும்பூரில் உள்ள மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத் தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போலீசார் அவர்களை கைது



செய்து மாலை விடுவித்தனர்.

மூன்றாம் நாளாக நேற்று சென்னை பிராட்வேயில் உள்ள கலெக்டர் அலுவலகத் தை திடீரென முற்றுகை யிட்டு, நுழைவு வாயி லில் அமர்ந்து கோரிக் கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இந்த நிலையில் சென்னை மெரினா சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே இன்று 4-வது நாளாக இடைநிலை ஆசிரியர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

தி.மு.க.வின் 311-வது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் தெரி வித்தனர். அவர்களை அங்கிருந்து அப்புறப் படுத்த முயன்றபோது, போலீசாருக்கும், போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் களுக்கும் இடையே சிறிதுநேரம் தள்ளு முள்ளு ஏற்பட்டதால், ஆசிரியர்களை போலீ சார் கைது செய்தனர். எனினும், தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர் போராட்டத் தில் ஈடுபடுவோம் என அவர்கள் தெரிவித் துள்ளனர். இடைநிலை ஆசிரியர்கள் மெரினா கடற்கரை சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதி பரபரப்புடன் காணப்படுகிறது. போராட்டம் காரண மாக தலைமை செயலகம் செல்லும் வழியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## மக்கள் குரல் பார்வையில்... ஒரு புதிய கண்டுபிடிப்பு; ஒரு லட்சம் ரூபாயை தாண்டிய பங்கு விலை: டிசம்பர் 29 ஒரு வரலாறு!

சென்னை 30, டிசம்பர் 2025: 1990 ஆம் ஆண்டு பங்குச் சந்தையில் ரூ.332 என்ற விலையில் பரிமாறப் பட்ட எம்.ஆர்.எப் பங்கு, 2000 ஆம் ஆண்டில் ரூ.2,820 ஆக உயர்ந்தது. இந்தியாவின் வாகன மற்றும் வர்த்தக வாகனத் துறை விரி வடைந்த 2010 களில் இந்த பங்கின் வளர்ச்சி வேகம் பெற்றது. 2020ஆம் ஆண்டில் ரூ.70,964 என்ற அளவுக்கு சென்ற எம்.ஆர்.எப் பங்கு, 2021ஆம் ஆண்டு ரூ.1 லட்சத்தைத் தாண்டி, இந்திய பங்குச்சந்தை வரலாற்றில் அந்த சாதனையை நிகழ்த்திய முதல் பங்காக மாறியது.

இந்த அபாரமான உயர்வுக்கு காரணமாக, டயர் துறையில் எம்.ஆர்.எப் நிறுவனம் பெற்ற ஆதிக்கமும், அதன் நீண்டகால நம்பகத்தன்மையும் குறிப்பிடத்தக்கவை.

ஆனால், இந்த வெற்றிப் பயணத்தின் பின்னணியில் ஒரு நூற் றாண்டுக்கு முந்தைய அறிவியல் கண்டு பிடிப்பும் மறைந் திருக்கிறது.

அரிய கண்டு பிடிப்பு:

அந்தக் கண்டுபிடிப் பை நிகழ்த்தியவர் அமெரிக்க கண்டுபிடிப் பாளர் சார்ல்ஸ் கூட் இயர். 1800 டிசம்பர் 29 அன்று கனெக்டிகட் மாநிலம் நியூ ஹேவனில் பிறந்த அவர், ரப்பரின் தன்மையை மேம்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் ஆண்டு கள் முழுவதும் பரிசோ தனைகள் செய்தார். 1839 ஆம் ஆண்டு, இயற்கை ரப்பரை சல்பருடன் சூடாக்கிய போது அது வலுவாக வும், நெகிழ்வாகவும், வெப்பத்தையும் ரசாயனங்களையும் தாங்கும் தன்மை கொண்டதாக மாறியது. இதுவே பின்னர் 'வல்கனைசேஷன்' என அழைக்கப்பட்ட முக்கிய கண்டுபிடிப் பாக அமைந்தது.

வல்கனைசேஷன் ரப்பரின் ஆயுளை நீட்டித்து, டயர்கள் உள்ளிட்ட பல தொழில்துறை பயன் பாடுகளுக்கு அடித் தளம் அமைத்தது. ஆனால், இத்தனை பெரிய தொழில்துறை புரட்சிக்கு வழிவகுத்த சார்ல்ஸ் கூட்இயர், காப்புரிமை வழக்கு களாலும் நிதிச் சிரமங் களாலும் பாதிக்கப் பட்டு, 1860ஆம் ஆண்டு வறுமையி லேயே உயிர்நீத்தார்.

இன்று உலகம் முழுவதும் பல லட்சம் கோடிக்கணக்கான வாகனங்கள் சாலையில் ஓடிக் கொண்டிருக்க, இந்தியாவில் எம்.ஆர். எப் போன்ற நிறுவனங் கள் பங்குச்சந்தை சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த வெற்றிக் கதையின் வேர்களில், ஒரே மனிதனின் தளராத முயற்சியும், ஒரு சிறிய அறிவியல் கண்டு பிடிப்பும் இருப்பது, வரலாற்றின் சுவாரசிய மான வினோதம்.

## 2025 ஃபிடே உலக ரேபிட் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அர்ஜூன் எரிகைசிக்கு பிரதமர் வாழ்த்து

சென்னை 30, டிசம்பர் 2025: தோஹா வில் நடைபெற்ற ஃபிடே உலக ரேபிட் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அர்ஜூன் எரிகைசிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித் துள்ளார். அவருடைய மன உறுதி குறிப் பிடத்தக்கது என்றும், எதிர்கால முயற்சிகள் வெற்றிபெற தாம் வாழ்த்துவதாகவும் திரு. மோடி குறிப்பிட் டுள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்ப தாவது;

"தோஹாவில் நடை பெற்ற ஃபிடே உலக ரேபிட் செஸ் சாம் பியன்ஷிப் போட்டியில் அர்ஜூன் எரிகைசி வெண்கலப் பதக்கம் வென்றது பெருமை அளிக்கிறது. அவருடைய மன உறுதி குறிப்பிடத்தக்கதாகும்.



அவருடைய எதிர்கால முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகள்."

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# கொள்கை உரையாடல்கள் மற்றும் செயல்திட்டக் கூட்டாண்மைகளுடன் கிரடாய் தேசிய மாநாடுதொடங்கியது




சென்னை 30, டிசம்பர் 2025: இந்தியாவின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ரியல் எஸ்டேட் துறையின் மாற்றத்தக்க பங்கை மையமாகக் கொண்டு, மூத்த கொள்கை வகுப்பாளர்கள், மாநில அரசுப் பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறை தலைவர்களை ஒரே மேடையில் ஒன்றிணைக்கும் கிரடாய் தேசிய மாநாடு இன்று தொடங்கியது. “விக்சித் பாரத் @2047” தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, நிலையான, உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான நகரங்களை உருவாக்குவது குறித்து இந்த மாநாடு கவனம் செலுத்துகிறது.

தொடக்க அமர்வில், இந்திய அரசின் மாண்புமிகு உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மற்றும் மத்திய-மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில், மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் 9,000 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும் கிரடாய்-யின் சுற்றுச்சூழல் மறுகாடு வளர்ப்பு முயற்சி தொடங்கி வைக்கப்பட்டது.

மாநாட்டில் பேசிய திரு. அமித் ஷா, “இந்தியாவின் நகர்ப்புற மாற்றத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ரியல் எஸ்டேட் ஒரு முக்கிய தூணாக உள்ளது. நிலையான வளர்ச்சியில் கிரடாய் எடுத்துள்ள முன்முயற்சிகள் பாராட்டத்தக்கவை” என்று தெரிவித்தார்.

இதேபோல், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒருங்கிணைந்தே முன்னேற வேண்டும் என வலியுறுத்தினார்.

மாநாட்டின் முதல் நாளில், வீட்டு வசதி, புத்தாக்கம், நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் குறித்த விரிவான விவாதங்கள் நடைபெற்றன. கோவா-ஐடிசி மற்றும் இந்திய மனித குடியேற்ற நிறுவனம் (ஐஐஹெச்எஸ்) உடன் கிரடாய் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, நிலையான நகர்ப்புற மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி சார்ந்த வளர்ச்சிக்கான புதிய பாதைகள் திறக்கப்பட்டன.

இதுகுறித்து கிரடாய் பேச்சாளர் கூறுகையில், “கிரடாய் தேசிய மாநாடு, அரசாங்கத்திற்கும் தொழில்துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முக்கிய மேடையாக உள்ளது.

ஒழுங்குமுறை தெளிவு, நிலைத்தன்மை மற்றும் தொழில்நுட்ப சார்ந்த வளர்ச்சியின் மூலம், இந்தியாவின் ரியல் எஸ்டேட் துறை பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான பங்களிப்பை வழங்கும்” என்றார்.

இந்த மாநாட்டின் தொடக்க நாளில், இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 600 பிரதிநிதிகள் கலந்து கொண்டு, ரியல் எஸ்டேட் துறையின் எதிர்கால பாதையை வடிவமைக்கும் விவாதங்களில் பங்கேற்றனர்.

# இந்தியாவில் சில்லறை வணிகத்தில் 9,400 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க சாம்சங் ‘தோஸ்த் விற்பனை’ திட்டத்தை விரிவுபடுத்துகிறது.



சென்னை 30, டிசம்பர் 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் முதன்மையான சாம்சங் டிஜிட்டல் & ஆஃப்லைன் திறன் பயிற்சி (டிஓஎஸ்டி) விற்பனைத் திட்டத்தின் ஒரு பெரிய அளவிலான விரிவாக்கத்தை அறிவித்துள்ளது, இதன் கீழ் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த 9,400 இளைஞர்கள் முன்னணி சில்லறை விற்பனைப் பணிகளுக்குப் பயிற்சி பெறுவார்கள். இந்த முயற்சி, திறமையான, எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் பணியாளர்களை உருவாக்குவதற்கும், இந்தியாவின் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்ற தொலைநோக்கை முன்னேற்றுவதற்கும் சாம்சங்கின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, டிஓஎஸ்டி விற்பனைத் திட்டம் இந்தியாவின் ’ேகமாக விரிவடைந்து வரும் ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை விற்பனைத் துறைக்கு ஒரு வலுவான திறமையாளர் குழாயை உருவாக்கியுள்ளது. இந்த ஆண்டு தொடங்கப்பட்ட டிஓஎஸ்டி விற்பனை 4.0 உடன், சாம்சங் இந்திய மின்னணுத் துறை திறன்கள் கவுன்சில் (இஎஸ்எஸ்சிஐ) மற்றும் தொலைத்தொடர்புத் துறை திறன்கள் கவுன்சில் (டிஎஸ்எஸ்சி) ஆகியவற்றுடன் இணைந்து அதன் திறன் மேம்பாட்டுப் பணியை இரட்டிப்பாக்குகிறது.

“இந்திய இளைஞர்களை நாட்டின் வளர்ச்சிக் கதையில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்கச் செய்வதில் சாம்சங் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. தொழில்துறையில் முதன்மையான முயற்சியான டிஓஎஸ்டி விற்பனைத் திட்டம், இன்றைய மாறும் சில்லறை வணிகச் சூழலில் செழிக்கத் தேவையான நம்பிக்கை, அறிவு மற்றும் நடைமுறைத் திறன்களுடன் இளைஞர்களை, குறிப்பாக வசதியற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்களை சித்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட 5 மாத பயிற்சித் திட்டமாகும்.

இந்த ஆண்டு பயிற்சி சேர்க்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ள நிலையில், டிஜிட்டல் தத்தெடுப்பு துரிதப்படுத்தப்பட்டு சில்லறை வணிகம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் நேரத்தில், டிஓஎஸ்டி வலுவான, வேலை வாய்ப்புக்குத் தயாரான திறமையாளர் குழுவை வடிவமைக்க உதவுகிறது,” என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் சிஎஸ்ஆர் & கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் தலைவர் சுபம் முகர்ஜி கூறினார்.

கட்டமைக்கப்பட்ட, தொழில்துறைக்குத் தயாரான பயிற்சி பாதை

ஒவ்வொரு பயிற்சியாளரும் இஎஸ்எஸ்சிஐ மற்றும் டிஎஸ்எஸ்சி இன் சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர்களால் வழிநடத்தப்படும் 120 மணிநேர ஆன்லைன் வகுப்பறை தொகுதிக்கும், சாம்சங் சில்லறை விற்பனைக் குழுவின் 60 மணிநேர பயிற்சிக்கும் உட்படுகிறார்கள். பாடத்திட்டம் உள்ளடக்கியது:

வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் தொடர்பு

விற்பனை அடிப்படைகள் மற்றும் சில்லறை விற்பனை செயல்முறைகள்

தயாரிப்பு அறிவு மற்றும் செயல் விளக்க திறன்கள்

கடை செயல்பாடுகள் மற்றும் சேவை சிறப்பு

நாடு முழுவதும் உள்ள சாம்சங் சில்லறை விற்பனைக் கடைகளில் 5 மாத வேலை வாய்ப்புப் பயிற்சியின் (ஓஜேடி) போது, வாடிக்கையாளர் ஈடுபாடு, கடை செயல்முறைகள், தயாரிப்பு கல்வி மற்றும் விற்பனை மாற்றம் ஆகியவற்றில் நேரடி அனுபவத்தைப் பெறுகிறார்கள், மேலும் அவர்களின் கற்றல் மற்றும் பயிற்சி அனுபவத்தை ஆதரிக்க சாம்சங்கிலிருந்து மாதாந்திர ஊதியத்தைப் பெறுகிறார்கள்.

ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை வணிக சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் நீண்டகால தொழில் வாழ்க்கைக்கான பாதைகளைத் திறக்கிறது.

# வேலை, கற்றல் மற்றும் பொழுதுபோக்கு முழுவதும் ஸ்மார்ட் அனுபவங்களை வழங்க சாம்சங் இந்தியா கேலக்ஸி டேப் ஏ11+ ஐ அறிமுகப்படுத்துகிறது




சென்னை 30, டிசம்பர் 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், இன்று கேலக்ஸி டேப் ஏ11+ ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது, இது வேகமான மற்றும் ஆற்றல்-திறனுள்ள செயல்திறனுடன் அதிக பயனர்களுக்கு பயனளிக்கும் வகையில் முக்கிய கிமி திறன்களை அறிமுகப்படுத்துகிறது, இது தடையற்ற பல்பணிக்கு ஏற்றது. கேலக்ஸி டேப் ஏ11+ ஒரு அதிவேக 11-இன்ச் டிஸ்ப்ளே மற்றும் ஒரு நேர்த்தியான உலோக வடிவமைப்புடன் அறிவார்ந்த அம்சங்களை ஒருங்கிணைக்கிறது.

கேலக்ஸி டேப் ஏ11+ மென்மையான ஸ்க்ரோலிங் மற்றும் ஸ்ட்ரீமிங் மற்றும் டிஜிட்டல் கற்றலுக்கான ஒரு அதிவேக பார்வை அனுபவத்தை வழங்குகிறது. துடிப்பான டிஸ்ப்ளே டால்பி அட்மாஸுடன் கூடிய குவாட் ஸ்பீக்கரால் நிரப்பப்படுகிறது, இது திரைப்படம், இசை மற்றும் ஆன்லைன் கற்றலுக்கான பணக்கார, சமநிலையான ஆடியோவை வழங்குகிறது. பயன்பாட்டினை மேம்படுத்த சாதனம் 3.5 மிமீ ஆடியோ ஜாக்கையும் ஆதரிக்கிறது. 8எம்பி பின்புற கேமரா மற்றும் 5எம்பி முன் கேமரா தெளிவான வீடியோ அழைப்புகள், ஆவண ஸ்கேனிங் மற்றும் கூர்மையான உள்ளடக்க பிடிப்பை செயல்படுத்துகிறது. இது மாணவர்கள், படைப்பாளிகள் மற்றும் குடும்பங்கள் தொடர்பில் இருப்பதையும் உற்பத்தித் திறனையும் எளிதாக்குகிறது.

“சாம்சங்கில், அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் அர்த்தமுள்ள புதுமைகளுக்கான அணுகலை விரிவுபடுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். கேலக்ஸி டேப் ஏ11+ மூலம், இந்தியாவில் அதிகமான பயனர்களுக்கு சக்திவாய்ந்த ஏஐ திறன்கள், பிரீமியம் வடிவமைப்பு மற்றும் நம்பகமான நாள் முழுவதும் செயல்திறனை நாங்கள் கொண்டு வருகிறோம். பயணத்தின்போது உற்பத்தித்திறன், கற்றல் மற்றும் பொழுதுபோக்கை ஆதரிக்கும் வகையில் இந்த சாதனம் சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது,” என்று சாம்சங் இந்தியாவின் எம்எக்ஸ் வணிக இயக்குநர் சாக்னிக் சென் கூறினார்.

ஸ்மார்ட்டர் கற்றல் மற்றும் அன்றாட பணிகளுக்கான மேம்பட்ட ஏஐ

கேலக்ஸி டேப் ஏ11+ பயனர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ள, ஆராய மற்றும் பணிகளை முடிக்க உதவும் அத்தியாவசிய ஏஐ அம்சங்களைக் கொண்டு வருகிறது:

- கூகிள் ஜெமினியுடன், பயனர்கள் நிகழ்நேர காட்சி ஏஐ ஐப் பெறுகிறார்கள், இதன் மூலம் அவர்கள் அன்றாட பணிகளை எளிதாக்கும் உரையாடல் தொடர்புகளில் மிகவும் இயல்பாக ஈடுபட முடியும்.

கூகிள் மூலம் தேடுவதற்கு வட்டம், ஒரு எளிய சைகை மூலம் உடனடி பதில்களை வழங்குகிறது, பயனர்கள் தங்கள் திரையில் உள்ள எதையும் ஆராய, புரிந்துகொள்ள மற்றும் ஆழமாக ஆராய உதவுகிறது. பயனர்கள் செய்தி கட்டுரைகள், சமூக ஊடக இடுகைகள் அல்லது ஆன்லைன் உள்ளடக்கத்தை உருட்டும்போது,

அவர்கள் விரும்பும் மொழியில் உடனடி ஆன்-ஸ்கிரீன் மொழிபெயர்ப்புகளுடன், நிகழ்நேரத்தில் உரையை மொழி பெயர்க்கலாம்.

- சால்வ் மேத் ஆன் சாம்சங் குறிப்புகள் சமன்பாடுகள் மற்றும் பணிகளுக்கு படிப்படியான ஆதரவை வழங்குகிறது. கையால் எழுதப்பட்ட மற்றும் தட்டச்சு செய்யப்பட்ட வெளிப்பாடுகள் இரண்டையும் நிகழ்நேரத்தில் ஆதரிக்கும் கருவியுடன் சிக்கலான கணித சமன்பாடுகளுக்கு இது விரைவான மற்றும் துல்லியமான தீர்வுகளை வழங்குகிறது - அடிப்படை எண் கணிதம் முதல் மேம்பட்ட, அறிவியல் கால்குலேட்டர்-நிலை கணக்கீடுகள் மற்றும் அளவீடுகளுக்கான அலகு மாற்றங்கள் வரை அனைத்தையும் கையாளுதல்.

இந்த அம்சங்கள் கற்றலை மிகவும் ஊடாடும் மற்றும் உற்பத்தித்திறனை மிகவும் தடையற்றதாக ஆக்குகின்றன, பள்ளி, வேலை அல்லது வீட்டில் இருந்தாலும் சரி.

சக்திவாய்ந்த செயல்திறன் மற்றும் தாராளமான சேமிப்பு

4என்எம் அடிப்படையிலான மீடியாடெக் எம்டி8775 செயலியால் இயக்கப்படும் கேலக்ஸி டேப் ஏ11+ பல்பணிக்கு மென்மையான செயல் திறனை வழங்குகிறது. 6ஜிபி + 128ஜிபி மற்றும் 8ஜிபி + 256ஜிபி வகைகளில் கிடைக்கிறது, 2டிபி வரை விரிவாக்கக் கூடிய சேமிப்பகத்திற்கான ஆதரவுடன், இது உள்ளடக்கம், பெரிய கோப்புகள் மற்றும் கற்றல் பொருட்களை சேமிப்பதற்கு ஏற்றதாக அமைகிறது. 25டபிள்யு வேகமான சார்ஜிங் கொண்ட 7,040எம்ஏஹெச் பேட்டரி நம்பகமான, நாள் முழுவதும் பயன்பாட்டை உறுதி செய்கிறது.

பிரீமியம் வடிவமைப்பு மற்றும் தடையற்ற இணைப்பு

கேலக்ஸி டேப் ஏ11+ சாம்பல் மற்றும் வெள்ளி நிறங்களில் சுத்திகரிக்கப்பட்ட பூச்சு விருப்பங்களுடன் ஒரு நேர்த்தியான உலோக வடிவமைப்பில் வருகிறது. அதன் மெலிதான சுயவிவரம் - 257.1 x 168.7 x 6.9 மிமீ அளவிடும் மற்றும் 480 கிராம் (வைஃபை) மற்றும் 491 கிராம் (5ஜி) எடை கொண்டது - நாள் முழுவதும் வசதியான பெயர்வுத்திறனை வழங்குகிறது. 5ஜி மற்றும் வை-ஃபை வகைகளில் கிடைக்கும் கேலக்ஸி டேப் ஏ11+ வீட்டிலோ, வேலையிலோ அல்லது பயணத்திலோ இருந்தாலும் இணைப்பில் இருப்பதை எளிதாக்குகிறது.

விலை மற்றும் கிடைக்கும் தன்மை

கேலக்ஸி டேப் ஏ11+ நவம்பர் 28 முதல் ஐஎன்ஆர் 19999 இல் கிடைக்கும் (வங்கி கேஷ்பேக் உட்பட). இது அமேசான், சாம்சங்.காம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் கிடைக்கும்.

# எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் கல்லூரி மாணவியை பின்தொடர்ந்து சென்று, தொந்தரவு கொடுத்த நபர் கைது




சென்னை 30, டிசம்பர் 2025: சென்னை பெருநகர காவல், தி.நகர் காவல் மாவட்டத்தில் வசித்து வரும் 20 வயது பெண் ஒருவர் கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வருவதாகவும், மேற்படி பெண் வசித்து வரும் தெருவில் இஸ்திரி கடை நடத்தி வரும் நாகா என்பவர் அப்பெண் கல்லூரிக்கு செல்லும் போது இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து சென்று பேசுவது, செல்போன் நம்பர் கேட்பது, இருசக்கர வாகனத்தில் ஏறுமாறு அழைப்பது என தொந்தரவு செய்து வந்துள்ளதாகவும், இது குறித்து அப்பெண்ணின் தாயார் மற்றும் தந்தை நாகாவிடம் கண்டித்துள்ளதாகவும், ஆனால் கடந்த 26.12.2025 அன்று மேற்படி பெண் அவரது தாயாருடன் சேர்ந்து எம்.ஜி.ஆர் நகர் மார்கெட் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த போது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நாகா இருவரையும் வழிமறித்து அப்பெண்ணிடம் பேச முயற்சித்து, அவரது தாயாரிடம் உங்களது மகளை தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டு அங்கிருந்து சென்றதாகவும், தனது மகளை பின் தொடர்ந்து சென்று தொந்தரவு கொடுக்கும் நாகா மீது நடவடிக்கை எடுக்கும்படி பாதிக்கப்பட்ட பெண்ணின் தாயார் டபிள்யு-26 அசோக் நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (டிஎன்பிஹெச் டபிள்யு ஆக்ட்) ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

டபிள்யு-26 அசோக் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி நாகா, வ/33, எம்.ஜி.ஆர் நகர், சென்னை என்பவரை 28.12.2025 அன்று கைது செய்தனர்.

அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி நாகாவுக்கு ஏற்கனவே திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி நாகா விசாரணைக்குப் பின்னர் நேற்று 28.12.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## ☼இந்தியாவில் வெளியான மிகப்பெரிய ஹாலிவுட் திரைப்படமான ‘அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்’ 2025 ஆம் ஆண்டின் கிறிஸ்துமஸ் விடுமுறை காலத்தில் அதிகளவிலான ரசிகர்களை ஈர்த்து வருகிறது!☼

சென்னை 30, டிசம்பர் 2025: இயக்குநர் ஜேம்ஸ் கேமரூனின் 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' திரைப்படம் இந்தியாவில் 2025 ஆம் ஆண்டின் மிகப்பெரிய ஹாலிவுட் வெளியீடாக மட்டுமில்லாமல், பாக்ஸ் ஆஃபிஸிலும் நல்ல வசூலைப் பெற்று இந்திய ரசிகர்கள் மத்தியில் மீண்டும் தனது இருப்பை தக்க வைத்துள்ளது.

கிறிஸ்துமஸ் விடுமுறையை ஒட்டி பல படங்கள் வெளி வந்தாலும் அதை எல்லாம் தாண்டி, 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' திரைப் படம் பாக்ஸ் ஆஃபிஸ் வசூலில் சாதனை படைத்தது மட்டுமல்லாது, இரண்டாவது வார இறுதிக்குள்ளும் வெற்றிகரமாக நுழைந்துள்ளது.



கிறிஸ்துமஸ் விடுமுறை காலத்தில் திரையரங்குகளுக்கு சென்று பார்க்க 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' திரைப் படம் குடும்பப் பார்வையாளர்களின் முதல் தேர்வாக உள்ளது.

மேலும், பிரம்மாண்டமான சினிமா அனுபவத்தை இந்தத் திரைப் படம் அனைத்து வயதினருக்கும் கொடுக்கிறது எனவும் ரசிகர்கள் பாராட்டி வருகின்றனர்.

நாடு முழுவதும் உள்ள பார்வையாளர்களிடம் உணர்வுப்பூர்வமாக கனெக்ட் ஆன இந்தப் படம் இதுவரை, இந்திய பாக்ஸ் ஆஃபிஸில் ரூ. 130 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்துள்ளது.

விடுமுறை காலத்தில் திரையரங்குகளுக்கு அதிகளவிலான ரசிகர்களை ஈர்த்து வரும் 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' திரைப் படம் இந்த ஆண்டில் இந்தியாவில் ஹாலிவுட் திரைப்பட வெளியீடுகளுக்கு புதிய அளவுகோலை அமைத்துள்ளது.

## ஆஸ்கர்-கிராமி நாயகன் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான், கிராமி விருது பெற்ற வயலின் கலைஞர் கணேஷ் ராஜகோபாலனால் கருத்தாக்கம் செய்யப்பட்ட ‘த்ரிபின்னா’ இந்திய சிம்பொனியை வெளியிட்டார்

சென்னை 30, டிசம்பர் 2025: இந்திய இசையை உலக அரங்கில் நிலைநிறுத்துவதில் முக்கியப் பங்காற்றிய ஆஸ்கர் மற்றும் கிராமி விருது வென்ற இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான், கிராமி விருது பெற்ற வயலின் கலைஞர் கணேஷ் ராஜகோபாலனால் கருத்தாக்கம் செய்யப்பட்ட 'த்ரிபின்னா' என்ற இந்திய சிம்பொனி இசை ஆல்பத்தை டிசம்பர் 27 (சனிக்கிழமை) அன்று சென்னையில் உள்ள பிக்வயலின்ஷாப்பில் தொடங்கி வைத்தார்.

ஏ.ஆர். ரஹ்மான் ஆல்பத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து, ஸ்வரயோகா குழுவினருடன் இணைந்து அனிருத்தா பட் மிருதங்கம் வாசிக்க, 'த்ரிபின்னா' ஆல்பத்தில் உள்ள இசையமைப்புகளை கணேஷ் ராஜ கோபாலன் நேரடியாக வாசித்துக் காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பிரபல கர்நாடக இசைக்கலைஞர்களான கிருஷ்ண குமார் மற்றும் பின்னி கிருஷ்ண குமார், வயலின் கலைஞர் குமரேஷ் மற்றும் வீணை கலைஞர் ஜெயந்தி குமரேஷ் உள்ளிட்ட இசை மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.



'த்ரிபின்னா' ஆல்பம், ஸ்வரங்களை வரிசையாக மட்டும் இசைக்காமல், அவற்றை பிரித்து பின்னர் ஒன்றாக இணைக்கும் ஒரு பழங்கால கர்நாடக இசைக்கருத்திலிருந்து உருவாக்கப்பட்டது ஆகும். ஆரம்பகால கமகம் கருத்துகளில் வேரூன்றிய இந்த ஆல்பம், ஒரு ராகத்திற்குள் பல ஸ்வரங்களை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதை ஆராய்ந்து, இந்திய பாரம்பரிய சூழலில் விரிவான இசை அமைப்புகளை உருவாக்குகிறது. இந்த அணுகுமுறையின் மூலம், இந்த ஆல்பம் ராகத்தின் வெளிப்பாட்டு எல்லையை விரிவுபடுத்துவதோடு, பாரம்பரியமும் கற்பனையும் ஒரு பெரிய இசைக்களத்தில் இணையும் இந்திய சிம்பொனியை உருவாக்குகிறது.

கர்நாடக இசையின் வேர்களைப் பாதுகாப்பதில் கணேஷ் ராஜகோபாலனின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை 'த்ரிபின்னா' ஆல்பம் பிரதிபலிக்கிறது. இந்த ஆல்பத்தில் கணேஷ் ராஜகோபாலனின் மாணவர்களான ஸ்வரயோகா குழுவினர், மேலும் புகழ்பெற்ற கலைஞர்களான பதிரி சதீஷ் குமார், ஒஜஸ் ஆத்யா, திருச்சி கிருஷ்ணசாமி மற்றும் சுவாமிநாதன் செல்வ கணேஷ் ஆகியோர் பங்காற்றியுள்ளனர்.

இந்த ஆல்பம் அனைத்து டிஜிட்டல் தளங்களிலும் கிடைக்கிறது.

மேலும் தகவல்களுக்கு:

இணையதளம்: https://ganeshrajagopalan.com/

மின்னஞ்சல்: Swarayoga.music@gmail.com.

## 140 கோடி இந்தியர்களுக்கு உத்வேகம் அளித்த ஒரு தலைவரின் வாழ்க்கையை 'நமோத்சவம்' நிகழ்ச்சி சித்தரிக்கிறது அமித் ஷா

சென்னை 30, டிசம்பர் 2025: பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்க்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு புகழ் சேர்க்கும் விதமாக, மெய்சிலிர்க்கச் செய்யும் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சியான "நமோத்சவம்" அகமதாபாத் நகரில் நடைபெற்றது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்க்கை, தலைமைத்துவப் பண்பு, தொலைநோக்குப் பார்வையைச் சித்தரிக்கும் வகையில், நமோத்சவ் என்ற பிரமாண்டமான இசை நிகழ்ச்சி, நாட்டின் பெருமை, கலாச்சாரம் மற்றும் உத்வேகம் நிறைந்த மறக்க முடியாத மாலைப் பொழுது வேளையில் நேற்று அகமதாபாத் நகரில் அரங்கேறியது. சன்ஸ்கார்தாம் என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மூன்று நாள் கலாச்சார நிகழ்ச்சியில் ஏராளமான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். இது கலை, இசை, தொழில்நுட்பம் மற்றும் கதைசொல்லல் போன்ற பல்வேறு துறைகளை ஒன்றிணைத்து, சேவை, உறுதிப்பாடு மற்றும் நாட்டைக் கட்டமைப்பதில் வேரூன்றியுள்ள அசாதாரணமான பயணத்தை விவரித்தது.

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான திரு அமித் ஷா 'நமோத்சவம்' நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய திரு அமித் ஷா, "நமோத்சவம் என்பது ஒரு தலைவரின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது.

அவர் கடந்த 11 ஆண்டுகளாக, 2047-ம் ஆண்டிற்குள் இந்தியாவை அனைத்துத் துறைகளிலும் முன்னணி நாடாக உருவெடுக்கச் செய்து,140 கோடி இந்தியர்களுக்கு உத்வேகம் அளித்துள்ளார். ஒரு நபர் தனது முழு வாழ்க்கையையும் ஒரு குறிப்பிட்ட தேசிய நோக்கத்திற்காக அர்ப்பணித்து, அதனை அடைவதற்காகத் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு, பின்னர் அதே கனவைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பெரிய குழுவை நாடு முழுவதும் உருவாக்கினால் மட்டுமே இது சாத்தியமாகும்," என்று கூறினார்.



நமோத்சவம் என்பது ஒரு பிரம்மாண்டமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட இசை நிகழ்ச்சியாகும். இது பிரதமர் நரேந்திர மோடியின் உத்வேகம் தரும் வாழ்க்கை முறை குறித்தும், குஜராத் மாநிலத்தில் உள்ள வட்நகரில் அவரது எளிமையான வாழ்க்கைப் பயணம், குஜராத் மாநில முதலமைச்சராகவும் பின்னர் நாட்டின் பிரதமராகவும் அவர் ஆற்றிய பணிகள், தலைமைத்துவம் வரை கலைநயத்துடன் சித்தரிக்கிறது என்று கூறினார். நேரலை நிகழ்ச்சிகள், இசை, நடனம், கதைசொல்லல் மற்றும் அதிநவீன பல்லூடகக் காட்சிகள் ஆகியவற்றின் தடையற்ற கலவையின் மூலம், இந்த நிகழ்ச்சி அவரது தனிப்பட்ட பயணத்தையும் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையையும் வடிவமைத்த முக்கிய நடவடிக்கைகளை எடுத்துக் காட்டியது.

இந்த நிகழ்வில் ஏராளமான முக்கிய பிரமுகர்கள், கலாச்சாரப் பயிற்சியாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்கள் கலந்துகொண்டனர்.

## ☼குழந்தைகளுக்கான அனிமேஷன் திரைப்படமான ‘கிகி & கொகொ’ படத்தின் டீசர் வெளியீட்டு விழா!☼

சென்னை 30, டிசம்பர் 2025: இனிகா புரொடக்ஷன்ஸ் வழங்கும் குழந்தைகளுக்கான இந்தியாவின் முதல் அனிமேஷன் படம் 'கிகி & கொகொ'. இயக்குநர் பி. நாராயணன் இயக்கியுள்ள இந்தப் படத்தின் டீசர் வெளியீட்டு விழா இன்று நடைபெற்றது.

இனிகா புரொடக்ஷன்ஸ் தலைமை செயல் அதிகாரி மீனா பேசியதாவது, "இந்தப் படம் எங்களுக்கு பெருமை. ஏனென்றால் சிங்கிள் பேரண்ட்டாக என் குழந்தைகளை நன்றாக வளர்த்திருக்கிறேன். பிற குழந்தைகளின் கல்விக்காகவும் நிறைய விஷயங்கள் செய்து வருகிறேன். இயக்குநர் நாராயணன் குழந்தைகளுக்கு என்னென்ன சொல்ல வேண்டும் என 20 வித்தியாசமான கதாபாத்திரங்கள் எழுதியிருந்தார். அதில் எனக்குப் பிடித்த கதாபாத்திரம் தான் ஸ்ரீனிகா. எந்த விதமான சிக்கலும் இல்லாத எளிமையான கதை இது. 2 வயதில் இருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகள் பள்ளி செல்லும்போது என்னென்ன கற்றுக் கொள்ள போகிறார்கள் என்பதுதான் கதை. நிறைய ஜாலியான விஷயங்கள் இதில் உண்டு. குழந்தைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்குமான கதை இது. உங்கள் ஆதரவு நிச்சயம் தேவை".

இயக்குநர் நாராயணன், "குழந்தை என்பது எல்லோருக்கும் கிடைக்கும் வரம். அந்த வரத்தை நாம் உருவாக்குகிறோம் எனும்போது அதில் பெருமை அடைய வேண்டும். ஸ்பைடர் மேன் பறப்பது, ஹீமேன் அடிப்பது என நிஜத்தில் நடக்காத பல ஃபேண்டசி விஷயங்களை தான் குழந்தைகளுக்கு திரைப்படத்தில் அறிமுகப்படுத்துகிறோம். நடைமுறையில் என்ன நடக்கிறது என்பதை இந்தப் படத்தில் காட்டியுள்ளோம். யாரையும் அடிக்க போவதில்லை, யாரும் பறக்க போவதில்லை. நாம் சராசரி மனிதனாக இருக்கும்போது யாருக்காவது உதவுகிறோம், சிரிக்கிறோம், நன்றியை நினைத்து பார்க்கிறோம், அன்பாக இருக்கிறோம். இந்த நடைமுறை விஷயங்களை படத்தில் பேசியிருக்கிறோம். நம் குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் மிகப் பெரிய சொத்தே அவர்கள் குணம்தான். எல்லோரையும் அன்பாக வைத்திருங்கள், அன்பு உங்களுக்கு திரும்ப கிடைக்கும்".

விஎஃப்எக்ஸ் இயக்குநர் கோகுல்ராஜ் பாஸ்கர், "கடந்த ஒரு வருடமாக 'கிகி & கொகொ' கதை பற்றி விவாதித்திருக்கிறோம். நிறைய ஹாலிவுட், தமிழ், மலையாளப் படங்களில் வேலை பார்த்திருக்கிறேன்.



இந்தப் படத்திற்காக கிகி கேரக்டர் டிசைன் செய்ய கார்ட்டன் ஃபிளவரை இன்ஸ்பிரேஷனாகக் கொண்டு தான் செய்தேன். குழந்தைகளுக்கான படம் என்பதால் எந்தவிதத்திலும் அவர்களை காயப்படுத்தாதபடி எடுக்க வேண்டும் என்பதில் இயக்குநர் உறுதியாக இருந்தார். எங்கள் முயற்சிக்கு உங்கள் அனைவரின் வாழ்த்துக்களும் ஆதரவும் தேவை".

விஎஃப்எக்ஸ் ஸ்பெஷலிஸ்ட், கிரியேட்டிவ் புரொடியூசர் ஜி.எம். கார்த்திகேயன், "இருபது வருடங்களுக்கும் மேலாக இந்தத் துறையில் இருக்கிறேன். மீனா மேடத்திடம் இருந்துதான் இந்தக் கதை ஆரம்பித்தது. குழந்தைகளுக்காக எழுதப்பட்ட இந்தக் கதையை சிறப்பாகக் கொண்டு வர வேண்டும் என புனே, பெங்களூருவில் இருந்தும் டீம் வரவழைத்து பணி செய்திருக்கிறோம். உங்களுக்கும் பிடிக்கும் என நம்புகிறேன்".

இசையமைப்பாளர் சி. சத்யா, "இந்தப் படத்தின் டைட்டிலே ஆங்கிலப் பாடலுக்கு இசையமைப்பது போன்ற உற்சாகத்தைக் கொடுத்தது. இந்த படமே எனக்கு புது அனுபவம். எந்தவிதமான மனக்கவலை இருந்தாலும் அந்த இடத்தில் குழந்தைகள் இருந்தால் எனர்ஜி கிடைக்கும். அப்படி எனக்குப் பிடித்த குழந்தைகளுக்கான படத்திற்கு இசையமைத்திருக்கிறேன். இந்த வாய்ப்புக்கு நன்றி".

புரொடக்ஷன் ஹெட் சிவராஜ், "குழந்தைகளுக்கான நேர்மறையான கதையம்சம் கொண்ட 80 நிமிட படம் இது. ஆர்வமூட்டும் விதமாகவும் எனர்ஜியாகவும் இந்தப் படம் இருக்கும்".

குழந்தை நட்சத்திரம் ஸ்ரீனிகா, "நான் தான் இந்தப் படத்தில் கொகோ. கொகொவுக்கு செல்லப்பிராணிகள் என்றால் மிகவும் பிடிக்கும். இந்தப் படத்தில் நடித்த பிறகு எனக்கும் நாய் வளர்க்க வேண்டும் என்ற ஆசை வந்துள்ளது".

## எம்.கே.பி நகர் பகுதியில் 17 வயது சிறுவனை தாக்கி செல்போன் மற்றும் பணம் பறித்துச் சென்ற வழக்கில் ஒருவர் கைது.

சென்னை 30, டிசம்பர் 2025: சென்னை, வியாசர்பாடி பகுதியில் வசித்து வரும் 17 வயது சிறுவன் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 27.12.2025 அன்று இரவு வேலை முடித்து வியாசர்பாடி, மூர்த்திங்கர் ஹவுசிங் போர்டு பூங்கா அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த தெரிந்த நபர்களான தனுஷ் உட்பட 6 நபர்கள் மேற்படி சிறுவனை வழிமறித்து பணம் கேட்டபோது, அவர் பணமில்லை என கூறியதாகவும், உடனே அந்த நபர்கள் அச்சிறுவனை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கியும், ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சிறுவனை தாக்கி அவர் வைத்திருந்த பணம் ரூ.400/- மற்றும் செல்போனை பறித்துச் சென்றதாகவும், இரத்தக் காயமடைந்த சிறுவன் ஸ்டான்லி

அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் கொடுத்த புகார் மீது பி-5 எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-5 எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளில் தனுஷ் (எ) ரிங்காட்டோ, வ/24, கணேசபுரம், வியாசர்பாடி, சென்னை என்பவரை 28.12.2025 அன்று கைது செய்தனர். விசாரணையில் எதிரி தனுஷ் மீது திருட்டு, வழிப்பறி என ஏற்கனவே 9 குற்ற வழக்குகள் உள்ளது




தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி தனுஷ் விசாரணைக்குப் பின்னர் 28.12.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## கள்ளக்குறிச்சி பிரிதிவிமங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி பலியானவர் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் : ஸ்டாலின் உத்தரவு

சென்னை 30, டிசம்பர் 2025: கள்ளக்குறிச்சி மாவட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் வசிக்கும் அய்யாக்கண்ணு என்பவரின் மகன் ராஜகோபால் (வயது 57) என்பவர் நேற்று (28ந் தேதி) காலை தனக்குச் சொந்தமான கிணற்றில் உள்ள விவசாய மின் மோட்டாரினை விவசாயத்திற்காக இயக்கும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த ராஜகோபாலின் குடும்பத்தினருக்கு



மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.